சனி - ஞாயிறு

சாதனை முகங்கள்!

கல்விக் கண் திறந்த ஆர்.வி.எஸ். குழுமம்!

கொங்கே முழங்கு..!

100 கல்லூரிகளின் தலைவர் கே.வி.குப்புசாமி பெருமிதம்

ஆர்.கிருஷ்ணகுமார்

அடிப்படையில நான் வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவன். குடும்பச் சூழல் கல்விக் கனவை கலைச்சது. இதனால, தொழிலாளியாக என்னோட வாழ்க்கையை தொடங்கினேன். அரிசி மூட்டை தூக்கியிருக்கேன். இத சொல்றதுல எனக்கு கவலையோ, அவமானமோ கிடையாது. ஆனால், பெரிய அளவுல தொழில் செய்யணும்னு முடிவெடுத்தேன். ஒவ்வொரு தொழில் தொடங்கினதுக்கு அப்புறம், அடுத்தடுத்து ஓடணும்னு நெனைச்சேன். என்னோட உழைப்புக்கு, கடவுள் கைகொடுத்தாரு" என்று கூறும் கே.வி.குப்புசாமி, மகன் ரத்தினவேல் சுப்பிரமணியம் பெயரில் முதல் பாலிடெக்னிக் தொடங்கியதற்குப் பிறகான வளர்ச்சியை விவரிக்கிறார்.

"திண்டுக்கல்லில் தொடங்கின ஆர்.வி.எஸ். பாலிடெக்னிக் நல்லா செயல்பட்டது. அடுத்த வருஷம் இன்ஜினீயரிங் காலேஜ் தொடங்க, அந்த வருஷமே அப்ளிகேஷன் போட்டோம். இதுக்கு நடுவுல, தனியாரால் தொடங்கப்பட்ட சில காலேஜுல அடிப்படை வசதிகளே இல்லைனும், சரியா செயல்படலைனும் பத்திரிகைங்க எழுதுச்சு. அதேசமயம், ஆர்.வி.எஸ். பாலிடெக்னிக், கலசலிங்கம் பாலிடெக்னிக்கெல்லாம் அடிப்படை வசதிகளோட இருக்கு. ஒரு கொள்கையோட செயல்படுதுன்னும் பாராட்டினாங்க.

இந்த விவகாரம் தொடர்பாக சட்டசபையில எதிர்க்கட்சிங்க விளாசித் தள்ளினாங்க. அதுக்கு பதில் கொடுத்த அமைச்சர் அரங்கநாயகம், 'ஆர்.வி.எஸ். பாலிடெக்னிக், கலசலிங்கம் பாலிடெக்னிக் எல்லாம் சிறப்பா செயல்படுறதா' சொன்னாரு. 'அந்த ரெண்டு பாலிடெக்னிக்குகளுக்கும் இன்ஜினீயரிங் காலேஜ் நடத்த உடனே பர்மிஷன் கொடுங்க'னு முதல்வர் எம்ஜிஆர் உத்தரவுபோட்டார். இது தொடர்பாக அதிகாரிங்க தொடர்புகொண்டு, ரூ.12 லட்சம் டெபாசிட் கட்ட சொன்னாங்க. நாங்களும் பணத்தைக் கட்டினோம். அப்புறமா, எங்கள கூப்பிட்ட அமைச்சர், குறைந்தபட்சம் 160 ஏக்கர் நிலமாவது இருந்தாதான், இன்ஜினீயரிங் காலேஜ் நடத்த பர்மிஷன் கிடைக்கும்னு சொன்னாரு. உடனடியா 160 ஏக்கருக்கு எங்க போவேன்? ஒரு நாள் டைம் கேட்டுக்கிட்டு, திண்டுக்கல் வந்துட்டேன்.

அப்ப ஒரு ரியல் எஸ்டேட் புரோக்கர சந்திச்சேன். செம்பட்டியில 160 ஏக்கர் நிலம் இருக்கறதா சொன்னாரு. உடனே, அங்கிருந்து கிளம்பினோம். அது எதுக்கும் உதவாத நிலம். இருந்தாலும் ஏக்கர் ரூ.3000 விலையில, 160 ஏக்கர் வாங்கினேன். இந்த தகவலை கல்வித் துறை அதிகாரிகளுக்கும் தெரிவிச்சேன். 10 நாளில் இன்ஜினீயரிங் காலேஜ் கட்ட அனுமதி கிடைச்சது. அதுக்கப்புறம் என்.பாரைப்பட்டிங்கற இடத்துல 50 சென்ட் நிலம் வாங்கி, இன்ஜினீயரிங் காலேஜுக்கு கட்டிடம் கட்டினேன். அதுக்கு பிறகு சுத்துவட்டாரப் பகுதியில இருந்த 25 ஏக்கர் நிலத்தையும் வாங்கினேன். மொதல்ல 160 ஏக்கர் இடம் வாங்கினது எஸ்.பாரைப்பட்டி. ஆனால, காலேஜ் கட்டினது என்.பாரைப்பட்டி. இதுக்குநடுவுல, இன்ஜினீரியங் காலேஜ் கட்ட 25 ஏக்கர் நிலமிருந்தா போதுமுன்னு அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் அறிவிச்சது. அப்புறம், அமைச்சர அணுகி, என்.பாரைப்பட்டியில இன்ஜினீயரிங் காலேஜ் இயங்க அனுமதி வாங்கிட்டோம்.

ஏழைகளுக்கு இலவசம்

அந்த காலேஜ்ல மொத்தம் 240 சீட் உண்டு. அதில் 120 சீட் மேனேஜ்மெண்ட் கோட்டா. அதுல 50 சீட்டை ஏழைப் பசங்களுக்கு இலவசமாக கொடுத்தோம். அதே மாதிரி, மற்ற சீட்டுங்களுக்கும், அரசு கோட்டாவுக்கு எவ்வளவோ, அத மட்டுமே வாங்கினோம். இதுக்கு நடுவுல, சூலூர்ல 50 ஏக்கர் நிலம் வாங்கி, ஒரு மெட்ரிகுலேஷன் ஸ்கூல் தொடங்கினேன். இப்ப தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்கள்ல 100 காலேஜுக்கு மேல இருக்கு. அத்தனைக்கும் பேரு ஆர்.வி.எஸ்.தான். எங்கள், ஐடிஐ, பாலிடெக்னிக், கலை, அறிவியல் கல்லூரி, இன்ஜினீயரிங், வணிக நிர்வாகம், ஆசிரியர் பயிற்சி, பல் மருத்துவம், பாரா மெடிக்கல், நர்சிங், வேளாண்மை, ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதா, பிசியோதெரபி, கேட்டரிங் டெக்னாலஜி, கம்ப்யூட்டர் அப்ளிகேஷன், மேனேஜ்மெண்ட் படிப்புன்னு எல்லாமே இருக்கு. தமிழ்நாட்டுல தனிப்பட்ட முறையில, மருத்துவக் கல்லூரியைத் தவிர, மற்ற அத்தனை கல்லூரிங்களையும் நடத்தி வர்றது நான் மட்டும்தான். மகன் செந்தில்கணேஷ், மகள் மரகதமணியும் நிர்வாகத்துக்கு வந்துட்டாங்க" என்றார் பெருமிதத்துடன்.

வேளாண்மையில் சாதனை

இவர், கல்வித் துறையுடன் நின்றுவிடவில்லை, விவசாயத் துறையிலும் கொடிகட்டிப் பறக்கிறார். தாதங்குளம், தென்காசி, செம்பட்டி, தஞ்சாவூர், திண்டுக்கல், கோவை ஊர்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஆர்.வி.எஸ். ஃபார்ம்ஸ் என்ற பெயரில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்கிறார். மாம்பழம், நெல்லிக்கனி, தென்னை, சப்போட்டா, புளி என அனைத்தும் இங்கு பயிர் செய்யப்படுகின்றன.

மத்திய அரசின் திட்டமான, வேளாண் விரிவாக்க மையம் (கிரிஷி விக்யான் கேந்திரா) மூலம், தஞ்சை, தென்காசியில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் விவசாயிகளிடையே விழிப்புணர்வுப் பணிகளிலும் ஆர்.வி.எஸ். நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

நெருக்கடிகளும்... இறை நம்பிக்கையும்...

"உங்கள் வாழ்க்கையில மறக்க முடியாத சம்பவம் என்று எதைக் கூறுவீர்கள்?" என்றோம். "அது நெறைய இருக்குதுங்க. அப்ப எனக்கு 36 வயது. டெக்ஸ்டைல் மில் கட்டறது தொடர்பாக மதுரையில ஒரு பார்ட்டி கொடுத்தேன். மில்லுக்கான மெஷினரிங்களுக்கு அட்வான்ஸ் மட்டும் கொடுத்திருந்தேன். அப்ப திடீர்னு ஒரு போன். மெஷின் கம்பெனிக்காரர் கூப்பிட்டு, 'குப்புசாமி, மெஷின் விலையெல்லாம் திடீர்னு அதிகரிக்கப்போகுது. உனக்காக ஒரு நாள் டைம் வாங்கறேன். அதுக்குள்ள பணத்தை ரெடி பண்ணுறீங்க'னு சொன்னாரு. கிட்டத்தட்ட ரூ.3 கோடியை ஒரே நாள்ள ரெடி பண்ணணும். மதுரையில இருந்து திண்டுக்கல்லுக்கு கார்ல திரும்பறேன். கண்ணுல என்னை அறியாம தண்ணி வருது. முருகா, திண்டுக்கல் போறதுக்குள்ள ஒரு பாம்பு பாக்கணும். அப்படிதான், எனக்கு உன் அனுக்கிரஹம் இருக்குனு நம்புவேன்'னு மனசுல நெனைச்சிக்கிட்டேன். நீங்க, என்ன வேணா நெனைச்சுக்கோங்க. குண்டடம் தோட்டத்துல கால வைக்கும்போது, பெரிய பாம்பு கடந்துபோச்சு. மண்ணைத்தொட்டு கும்பிட்டேன். ஊருக்கு வந்தப்ப, பேங்க் ஆஃப் தமிழ்நாடு மேனஜரப் பாத்தேன். என் கவலைய சொன்னேன். உடனே அவரு, 'என்னங்க முதலாளி, எங்க பேங்க் சேர்மேன் உங்கமேல பெரிய மரியாதை வச்சிருக்காரு. அவருக்கு போன் போட்டுப் பேசுங்க. உங்க பிரச்சினை தீரும்'னு சொன்னாரு. குளிச்சி, சாமி கும்பிட்டுட்டு அந்த பேங்கோட சேர்மன் ரங்கநாதன் கிட்ட பேசினேன். எப்ப திருப்பிக் கொடுப்பீங்கனு மட்டும்தான் கேட்டார். 15 நாள்ல திருப்பிக் கொடுத்துடுவேன்னு சொன்னேன். கொஞ்ச நேரத்துல அவங்க மேனேஜர், கிளார்க் எல்லாம் வந்து, டாக்குமெண்ட் ரெடி செஞ்சு, ரூ.3 கோடிக்கு டிராப்ட் கொடுத்தாங்க. அடுத்த 15 நாள்ள, சிப்காட், மாவட்ட தொழில் மையத்துல ரூ.10 கோடி கடன் சேங்ஷன் ஆச்சு. பேங்க் ஆஃப் இந்தியாவுக்குத் திருப்பிக் கொடுத்துட்டேன். இதெல்லாமே, இறைவனோட கருணை தாங்க" என்றார் தழுதழுக்க.

இப்படி முழுக்க இறைவனை நம்பியிருப்பதால்தானோ என்னவோ, ஏறத்தாழ 19 கோயில்களைக் கட்டி, கும்பாபிஷேகம் செய்துள்ளார். "விநாயகர், அறுபடைவீடு முருகப் பெருமான், ஷீரடி பாபா, வெங்கடாஜலபதி, சக்குளத்துகாவு அம்மன், பகவதி அம்மன்னு மொத்தம் 19 கோயில் கட்டியிருக்கேன். வேளை தவறாம பூஜைங்களும், வழிபாடுகளும் நடக்குது" என்றார்.

உழைப்பே உயர்வு

"முன்ன எல்லாம் மாசத்துக்கு 3 ஆயிரம் கிலோமீட்டர் டிராவல் செய்வேன். இது கார்ல மட்டும். ப்ளைட்டுல போறது தனி. இப்ப வயசாயிடுச்சி. மாதம் 2,000 கிலோமீட்டர் தான் டிராவல் செய்ய முடியுது. எனக்கு 3 ஆபரேஷன் செஞ்சிருக்காங்க. என்னோட 78 வயசுல, கிட்டத்தட்ட 30 வருஷம், தினமும் 5 மணி நேரம்தான் தூங்கியிருப்பேன். இப்ப தூக்க மாத்திரை போடறதால 8 மணி நேரம் தூங்கறேன்" என்றவரின் உழைப்பை, நம்மால் உணர முடிகிறது. முன்னாள் பிரதமர் சந்திரசேகர் மற்றும் நாடு முழுவதும் உள்ள அரசியல்வாதிகள், உயரதிகாரிகளுடன் கே.வி.கே.வுக்கு நல்ல நட்பு உள்ளது. "நண்பர்களும், எங்க நிறுவனத்தோட அதிகாரிங்க, தொழிலாளர்கள்தான் எங்களோட முதுகெலும்பே. ஒவ்வொருத்தரும் என்ன, அவங்க குடும்பத்துல ஒருத்தராத்தான் பாக்குறாங்க. நானும் அப்படித்தான். தொழிலாளர்கள் இல்லாம நாம இல்லீங்க. நான் ஆரம்பத்துல இருந்தே கடன் வாங்குவேன். ஆனா, ஒழுக்கமா கட்டிடுவேன். சரியா திருப்பிச் செலுத்தறதாலதான், பல நூறு கோடி கடன் வாங்க முடிஞ்சது. நேர்மைதாங்க நம்ம மரியாதையை காப்பாத்தும்" என்கிறார் உறுதியுடன்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ரங்க நாராயண ஜீயர் சுவாமிகளுடன் கே.வி.குப்புசாமி-பத்மாவதி.

இந்திய வேளாண் ஆய்வு மையம், இந்திய வேளாண் ஆய்வுக் கழகம், ரயில் பயணிகள் ஆலோசனைக் குழு, பால் பண்ணை பொருள் உற்பத்தி துணைக்குழு, பாரதியார் பல்கலைக்கழக செனட் உறுப்பினர் உட்பட பல பொறுப்புகளை வகித்துள்ள இவருக்கு, 1993-ல் இல்லாதி டையனோரா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. வித்யா ஜோதி, க்ளோரி ஆஃப் இந்தியா, உத்யோக் எக்ஸலன்ஸ், விஜயஸ்ரீ, பாரத் ஜோதி, விஜய பாரத், ராஜீவ்காந்தி விருது, இந்திராகாந்தி விருது, ஆண்டாள் அருட்செல்வர் விருது, பன்னாட்டுத் தங்க நட்சத்திர விருது என எத்தனையோ வாங்கியிருந்தாலும், 'கல்வி, ஆன்மிகச் செம்மல்' என்பதே இவருக்குப் பொருத்தமான விருது என்கிறார்கள் இவரையறிந்தவர்கள்.

குடும்பம்தாங்க உண்மையான சொத்து...

"1972-லயே நானும், பத்மாவதியும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கிட்டோம். நான் தொழில பாத்துக்கறது. வீடு, குடும்பம், நல்லது, கெட்டது எல்லாம் அவங்க பாத்துக்கறதுது. இதனால, என்னால முழுசா தொழில்ல கவனம் செலுத்த முடிஞ்சது. என்னோட வளர்ச்சிக்கு காரணமே அவங்கதான். 2013-ல உடல்நலக் குறைவால மனைவி பத்மாவதி இறந்துட்டாங்க. என்ன வரம் வாங்கி வந்தவன்னு சொல்லுவாங்க. ஆனால், என்னோட வரமே பத்மாவதிதான். அவங்க போனப்புறம் ஒவ்வொரு நாளும் வேதனைதான்.

எங்க சின்னதாத்தா நஞ்சப்ப செட்டியார்கிட்ட இருந்து விருந்தோம்பல கத்துக்கிட்டேன். எங்க வீட்டுக்கு யார் வந்தாலும், சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும். ஒரு நாள் நான் தனியா வருவேன். இன்னொரு நாள் 10 பேரக் கூட்டிக்கிட்டு வருவேன். எத்தனை பேர் வந்தாலும், அத்தனை பேருக்கும் சாப்பாடு ரெடியா இருக்கும். முன்கூட்டி சொல்லக்கூட மாட்டேன். இது எப்படின்னு ஆச்சரியமா ஒருநாள் கேட்டேன். 'அதப்பத்தி கவலைப்படாதீங்க. அது என்னோட வேலை'னு சொல்லுவாங்க அந்த மகராசி. அவங்க வைக்கற இட்லி மல்லிகைப்பூ மாதிரி இருக்கும். ஏர்போர்ஸ் ஆபீசருங்க, ஏர்போர்ட் அதிகாரிங்க எல்லாம் வந்து, மல்லிகைப்பூ இட்லிய விரும்பி சாப்பிடுவாங்க. இப்பவும் எங்க நிறுவனங்கள்ல தினமும் 1,000 பேருக்கு மேல இலவசமாக சாப்பிடறாங்க. கல்லூரி மாணவர்களும் 5,000 பேருக்குமேல குறைந்த விலையில சாப்பிடறாங்க. பழநி பாத யாத்திரை குழுவுக்கு வருஷத்துக்கு ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் போடறோம்.

ஒண்ணுமட்டும் சொல்றேங்க. எங்கிட்ட பல கோடி சொத்து இருக்கு. பல ஊர்கள்ள வீடுங்களும், நிலமும் இருக்கு. எங்கிட்ட 6,000 பேருக்கு மேல வேலை செய்யறாங்க. ஆனாலும், நான் தனிமையா இருக்கற மாதிரிதான் உணர்றேன். நைட்டு 8.30 மணிக்குமேல ஒரு ரூம்ல கதவை அடைச்சிக்கிட்டு, தனியாகத்தான் இருக்கேன். மனைவி இல்லாத கஷ்டம் வயசானதுக்கப்புறம் ரொம்ப வாட்டுது. இளைஞர்களுக்கு ஒண்ணு சொல்லிக்கறேன். நல்லா பாடுபட்டு வேலை செய்யுங்க. அதேசமயம், குடும்பத்தாரோட நேரத்த செலவிடுங்க! எல்லாத்தையும்விட அதுதான் பெரிய சொத்து. குடும்பம் இல்லாம ஒண்ணுமே இல்லீங்க!" என்று அவர் நெகிழ்வுடன் கூறியபோது, மனம் கனத்து, கண்களில் கொஞ்சம் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

அடுத்த வாரம்... அடுத்த சாம்ராஜ்யம்...

கொங்கு சாம்ராஜ்யங்கள் வேர் விட்ட கதை

தொடர்புக்கு
samrajiyam.k@thehindutamil.co.in

இளைய தலைமுறைக்கு நல்வழிகாட்டும் அப்பா...

கே.வி.குப்புசாமியின் மகள் டாக்டர் மரகதமணி. கோவையில் பி.பி.எம்., எம்.பி.ஏ. படித்த இவர், அமெரிக்காவில் கல்வியியலில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். பக்தவத்சலம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர், பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரியின் துணைத் தலைவர், பக்தவத்சலம் வித்யாஷ்ரம் பள்ளியின் தாளாளர் என பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளையும் வகிக்கிறார்.

தந்தையின் தலைமையின் கீழ் கல்வி மற்றும் கலையில் சிறந்த மாணவ, மாணவிகளை உருவாக்குவதில் அதிக ஈடுபாடு கொண்டு பணியாற்றுகிறார் இவர். "என் தந்தையின் செயல்திறனைப் பார்த்து வியந்திருக்கிறேன். அவரின் கடின உழைப்பும், விடாமுயற்சியும் என்னை பலமுறை பிரமிக்க வைத்துள்ளது. அவரின் நிர்வாகத் திறனைப் பார்த்து வளர்ந்ததால்தான், நான் இன்று உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறேன். எங்கள் நிறுவன நிர்வாகிகளுடனும், சக மனிதர்களுடனும் அவர் பழகும் முறையும், பேசும் விதமும் தனித்தன்மை வாய்ந்தது. கொங்கு மண்ணின் விருந்தோம்பலைப் பிரதிபலிக்கும் அவரது உபசரிப்பு. எல்லோரிடமும் சமமாகப் பழகுவார். எந்த வேலையையும் ஒத்திவைக்க மாட்டார். உடனுக்குடன் முடிவுகளை எடுப்பதுடன், அவற்றை விரைவாய் செயல்படுத்துவார். அவரது சுறுசுறுப்பு எல்லோருக்கும் பாடம். கடந்த காலங்களில் உதவியவர்களை ஒருபோதும் அவர் மறந்ததில்லை. எந்தச் சிக்கலான சூழலையும் எளிதில் கையாள்வார். ஒரு குறிக்கோளை நிர்ணயித்துவிட்டால், அதிலிருந்து சிறிதும் தடம்புரள மாட்டார். எவ்வளவு உயர்ந்தாலும் அவர் விரும்புவது எளிமைதான். 'காலில் காதி செருப்பு, இடுப்பில் நான்கு முழ கதர் வேஷ்டி, நெற்றியில் விபூதிப்பட்டை, முகத்தில் என்றும் மாறா புன்சிரிப்பு, நாடிவந்தவரை உபசரிக்கும் தன்மை, பிறர் மனம் நோகாமல் நடக்கும் நளினம், பேச்சில் நாகரிகம்' இதுதான் என் அப்பா. சோதனைகளை சாதனைகளாக்கி, தடைக்கற்களை வெற்றிப்படிக்கட்டுகளாக்கியவர். அவரது கடின உழைப்பும், இறையருளும், நண்பர்கள் உதவியுமே அவரது வெற்றிக்குக் காரணம் என்பார். இந்தப் பணியே என்னை எப்போதும் நெகிழச் செய்கிறது" என்கிறார் மரகதமணி.

சூலூர் திருப்பதி ஸ்ரீவெங்கடாஜலபதி கோவில்